## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




# ஈரானில் சிக்கித் தவிக்கும் 700 தமிழக மீனவர்களை உடனடியாக மீட்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

## வைகோ அறிக்கை!



சென்னை, மார்ச். 22–

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

குமரி மாவட்டம் கடியப்பட்டணம், குளச்சல், இணையம் மற்றும் முட்டம் உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 60 மீனவர்கள் ஈரானில் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்டோர் ஈரானில் பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவரும் அச்சத்தில் உள்ளனர்.

குமரி மாவட்டம் கடியப்பட்டணத்தைச் சேர்ந்த பாபின் செசாரியோ, சத்ய ரமான் ராஜ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் ”சகோதரர்கள் அஸ்வின் ரஞ்சித் குமார், சகாய ஜெனிஷ்ராஜ் ஆகியோர் ஈரான் மீன்பிடி நிறுவனத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பரில் பணிக்குச் சென்றனர்.

தற்போது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் ஈரான் நாட்டின் மீது போர் தொடுத்துள்ளதால் ஈரானில் எங்கள் சகோதரர்கள் பாதுகாப்பற்ற சூழலில் தவிக்கின்றனர். குண்டு மழை பொழிவதாகவும், உணவுகூட கிடைக்காமல் தவிப்பதாகவும் தெரிவித்தனர்.

ஈரான் நாட்டில் தவிக்கும் தமிழக மீனவர்களை பாதுகாப்பாக அழைத்துவர உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு மார்ச் 11ஆம் தேதி நீதியரசர் பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்த போது, அரசுத் தரப்பில், ஈரானில் உள்ள இந்தியர்களை மீட்க இந்திய தூதரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தூதரகத்தை தொடர்பு கொள்வதற்காக தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியர்களை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.


ஆனால் இதுவரையில் ஒன்றிய அரசு அவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

ஈரான் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் இடையிலான உக்கிரமான போர் பகுதியில் சிக்கித் தவிக்கும் 700க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் மீன்பிடி விசைப்படகுகளில் கடந்த மூன்று வார காலமாக முடங்கியுள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள காணொளியில், எந்த நேரத்தில் உயிர் பறி போகுமோ என்று குண்டு வீச்சுக்கு இடையில், உணவு தண்ணீர் இன்றி விசைப்படகுகளில் தங்கி உள்ளோம் என்று அச்சத்துடன் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே ஒன்றிய அரசு தமிழ்நாடு மீனவர்களை மீட்பதற்கு சிறப்பு விமானங்கள் அல்லது கப்பல்கள் மூலம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



உறக்கம் உன் விழிகளை
தழுவத் துடிக்கலாம் !
வெற்றிக்குப் பின் வருக
என்று அதற்கு
விடை கொடுத்து
அனுப்பி விடு.

.....கலைஞர்...

### அரசு அலுவலகங்களில்

# மாற்றுத் திறனாளிகளை அனுமதிக்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமா?

## மக்களவையில் – எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 22–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 17.3.26 அன்று மக்களவையில், அரசு அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகளை இடையூறு இல்லாமல் அனுமதிக்க தேவையான சிறப்பு திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தும் எண்ணம் உள்ளதா? என்றும் இதுவரை இது போன்ற திட்டங்களுக்கான நிதியுதவி எவ்வளவு அளிக்கப்பட்டுள்ளது? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் பி.எல். வர்மா அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:–

சுகம்யா பாரத் திட்டம் கடந்த 2015 ஆண்டு முதல் அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் மாற்றுத் திறனாளிகள் எளிதில் செல்லக் கூடிய வகையில் நிறைவேற்றப்படு கிறது என்றும், மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016ன் படி, மாற்றுத் திறனாளிகள் இடையூறு இல்லாமல் அரசு அலுவலகங்களுக்கும் சென்று வர தேவையான கட்டிட மாற்றங்களை செய்வதற்கு உரிய நிதியை ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கும் அரசு அலுவலகங்களுக்கும் வழங்கி வருகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் மாற்றுத் திறனாளிகள் எளிதில் செல்லக் கூடிய வசதிக்காக ரூபாய் 606 கோடிகள் இதுவரை செலவிடப் பட்டுள்ளதாகவும், தமிழ் நாட்டிற்கென 1844 அரசு கட்டிடங்களுக்காக ரூபாய் 73 கோடிகள் அளவிற்கு ஒன்றிய அரசு நிதியுதவி செய்துள்ளது என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் பி. எல். வர்மா அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிமந்தயத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் பி.சி. தங்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### இந்தியாவுடன் மொத்த உற்பத்திப் பெருக்கத்தில்

# மூலதனச் செலவீனத்தை உயர்த்த, ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 22–

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் 17 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், இந்தியாவின் மொத்த உற்பத்தி பெருக்கத்தில் தனியார் துறையின் மூலதன செலவீனத்தை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கை களை எடுக்கும் திட்டம் ஏதேனும் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும் செமி கண்டக்டர், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆகிய துறைகளில் மூதலீட்டை பெருக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா? என்றும் தனியார் துறை முதலீடு தொடர்ந்து குறைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும், ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:–

புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் அறிக்கையின் படி, தனியார் கூட்டாண்மை நிறுவனங்களின் நிலையான முதலீட்டு பெருக்கத்தின் சதவீத அளவு, கடந்த 2024–25ம் நிதியாண்டில் சுமார் பத்து சதவீதமாக உள்ளது என்றும், செமி கண்டக்டர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கும், மின்னணுவியல் தயாரிப்பு துறைகளின் வளர்ச்சிக்கும் தேவையான அனைத்து கொள்கை முடிவுகளையும் ஒன்றிய அரசு உடனடியாக எடுத்து வருகிறது என்றும், சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை மின்சாரம், பசுமை ஹைட்ரஜன், மின்கலம் மூலம் மின்சாரம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகைகளை அளித்து எரிசக்தி தயாரிப்பு துறைகளை மேம்படுத்த தேவையான அனைத்து முயற்சி களையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருவதாக நிதித் துறை இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

2026–29ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சுமார் ரூபாய் 12 இலட்சம் கோடிகள் அளவிற்கு போக்குவரத்து, தொடர்வண்டி, துறைமுகங்கள், கணினி கட்டமைப்புகள் ஆகிய துறைகளில் முதலீட்டு செலவீனத்திற் கென ஒன்றிய அரசு நிதியுதவி அளிக்க திட்டமிட்டுள்ளது என்றும், தனியார் துறையில் மூலதன செலவீனத்தை அதிகரிக்கும் வகையில், அரசு செலவீனங்கள், உற்பத்தி ஊக்கத் தொகை, வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரித்தல், கட்டமைப்பு கடன் நிதியங்கள், தனியார் – அரசு பங்களிப்பு, கட்டமைப்பு மேம்பாட்டிற்கான தேசிய வங்கி ஆகியவற்றின் மூலம் தேவையான அனைத்து முயற்சி களையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



## மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 22 | காலை 9.00 மணி | மானாமதுரை (தனி) | இளையான்குடி ஒன்றியம் | எம்.ஜி.எஸ். மஹால், புதுக்குடி, இளையான்குடி |
| மார்ச்.22 | மாலை 4.00 மணி | சோழவந்தான் (தனி) | மதுரை ஒன்றியம் | சோழவந்தான் |
| மார்ச். 23 | காலை 9.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடி நாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள், போடி நகரம், பழனி செட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

**சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**

